**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**முன்னிலை: திரு. இரா. இராஜசேகரன், எல்.எல்.எம்,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்**
**நீதித்துறை நடுவர், குன்னம்.**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07–ஆம் நாள் சனிக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.12/2024 இல்</u>**
**<u>இடைநிலை மனு எண்.5/2025</u>**

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், கீழப்புலியூர் (வடக்கு), கே.புதூர் கிராமம், தெற்கு தெரு, க.எண்.1/138 இல் வசிக்கும் முத்துசாமி மகனான இந்து விவசாயம் 45 வயதுள்ள சீத்தாபதி ... மனுதாரர்/1 ஆம் பிரதிவாதி

/எதிர்/

பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், கீழப்புலியூர் (வடக்கு), கே.புதூர் கிராமம், தெற்கு தெரு, க.எண்.238 இல் வசிக்கும் வீரமுத்து மகளும், முருகேசன் மனைவியுமான இந்து சுமார் 44 வயதுள்ள அஞ்சலை

... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் ஆணை 9 விதி 7 பிரிவின் கீழ் மனுதாரர்/1 ஆம் பிரதிவாதிக்கு எதிராக அசல் வழக்கில் கடந்த 08.01.2025 அன்று ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து வழக்கை மேல் நடத்த உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு முன்னிடப்பட்ட நாள் : 07.12.2025

நீதிமன்ற கட்டணம் : ரூபாய் 20/– மனுவிற்காக செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு 07.02.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.துரை.பெரியசாமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.V.ஸ்ரீராதிகா தேவி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

<u>**கட்டளையாணை**</u>

1. மனுதாரரின் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.
2. செலவுத் தொகை இல்லை.

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07-ம் நாள் என்னால் கையொப்பமிட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

RAJASEKARAN

District Munsif cum
Judicial Magistrate
Digitally signed by
RAJASEKARAN
Location: Kunnam
Date: 2026.02.07
16:40:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், குன்னம்.